# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 யூலை

## (203) வணிகச் சட்டம்

---

## பகுதி - A

### வினா இல. 01

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 OTQs இனை உள்ளடக்கியுள்ளது.

இவ்வினாவுக்கு அதிகளவானவர்கள் விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பெரும்பாலும் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட சகல புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினா இலக்கம் **1.10, 1.13** இற்கு சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். இதற்கான காரணங்களாக உரிய நேரத்தில் வைத்திருப்பவர் பற்றிய அறிவோ அல்லது விற்பனை ஒப்பந்தமொன்றில் விலையைத் தீர்மானிக்கும் முறைகள் பற்றிய போதிய அறிவோ இல்லாமையாகும்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது. ஏனெனில் இது சித்திப் புள்ளியை அடைவதற்கு பெருமளவில் பங்களிப்புச் செய்கிறது.

**பகுதி A** இற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் சிவில் சட்டம், குற்றவியல் சட்டம், பொருள்கள் விற்பனை கட்டளைச்சட்டம், வர்த்தகச் சட்டம், சர்வதேசச் சட்டம், பணச் சலவைச் சட்டம் மற்றும் மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே, இந்தப் பாடத்திற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டத்தின் சகல பகுதிகள் பற்றியுமான தமது அறிவை பரீட்சார்த்திகள் மேம்படுத்திக்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி - B

### வினா இல. 02

இவ்வினா காப்புறுதிச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்தது. இது ஓரளவு இலகுவான ஒரு வினாவாகும். ‘மிகுந்த நன்நம்பிக்கைக் கோட்பாட்டின்’ அடிப்படையிலமைந்த ஒரு விவரணமாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவை அணுகியிருந்ததுடன் சரியான விடையையும் அளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் ‘மிகுந்த நன்நம்பிக்கைக் கோட்பாடு’ பற்றி விவரித்திருந்தனர். காப்புறுதி ஒப்பந்தமொன்றில் நுழையும் வேளையில் வசந்தன் மிகுந்த நன்நம்பிக்கைக் கோட்பாட்டுடன் இணங்குவதற்குத் தவறியிருந்தார். எனவே, **வரையறுக்கப்பட்ட XYZ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள் காப்புறுதியின் கீழ் அவரது மனைவி நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள இயலாது. இதனை பெரும்பாலானவர்கள் சரியாகப் புரிந்து வைத்திருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இந்த வினா தொழிற் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது தொழிற் சட்டம் பற்றிய ஒரு இலகுவான வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சிலர் சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

இங்கு **ரோஸியின்** பதவி விலகலின்போது அவருக்கு உரித்தான பணிக்கொடையைக் கணிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தக் கணிப்பீட்டிற்கு அரை மாதச் சம்பளம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதை அடையாளங் கண்டிருக்கவில்லை. மேலும், EPF இனை மீளப்பெறுவதற்கு **ரோஸி**க்கு உள்ள உரிமையை விவரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. இதற்கு பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ETF சட்டத்தின் தொழிற்பாடுகள் பற்றி பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.**

## வினா இல. 04

இந்த வினா புலமைச் சொத்து பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது புலமைச் சொத்துச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ், **சுரேஸின்** இறப்பின் பின்னர் அவர் வெளியிட்ட புத்தகத்தை துஷ்பிரயோகம் செய்ததற்காக **நிமலுக்கு** எதிராக **சுரேஸின்** மனைவி சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமென புரிந்து கொண்டிருந்தனர். இதனால், அவர்கள் திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததுடன் சிறந்த புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இந்த வினா பங்குடமைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது பங்குடமைச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். இங்கு பங்குடமையின் கூறுகளை விவரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவை அணுகியிருந்ததுடன் ஓரளவுக்கு விடையளித்திருந்தனர். இங்கு பங்குடமை ஒன்றின் பங்காளர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உட்கிடையான அதிகாரங்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை.**

## வினா இல. 06

இந்த வினா முகவராண்மைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் ஓரளவு சரியான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் **சரத்** மற்றும் **கபில**வுக்கு இடையேயுள்ள சரியான முகவராண்மை வகையை இனங்கண்டிருக்கவில்லை.

மேலும், இங்கு **மொஹமட்** இடமிருந்து **கபில** கடன் அடிப்படையில் வாங்கிய கோழி உணவுப் பொருள்களுக்கு பணம் கொடுப்பதற்கான பொறுப்பு **சரத்** இற்கு உள்ளதா என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பாகக் குறிப்பிடப்படா விட்டாலும்கூட கோழி உணவுகளை வாங்குவது சரத்தின் உட்கிடையான அதிகாரத்தின் ஒரு முக்கிய பகுதி என்பதை விளங்கிக்கொள்ளவில்லை. **பகுதி (c)** இற்கு சிலர் விடையளித்திருக்கவில்லை. மேலும், முகவர் தனது அதிகாரத்தை மீறவில்லை என்ற உண்மையை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே வினாவின் இப்பகுதிக்கு விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.**

## <u>பகுதி - C</u>

### வினா இல. 07

**பகுதி (A)**

இந்த வினா ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு ஒப்பந்தச் சட்ட அறிவைப் பயன்படுத்தி தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த வினாவின் பகுதி **(a), (b), (c)** இற்கு விடையளிக்குமாறு கேட்கப்பட்டது. **பகுதி (A) (a)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒப்பந்தங்களுக்குப் பொருத்தமான ''அஞ்சல் விதி'' இன் அடிப்படையில் **அப்சரா** மற்றும் **ஹகதுடுவ** ஆகியோருக்கிடையில் வலிதான கொடைமுனைவொன்று காணப்படுகிறது என்பதை சரியாக இனங்கண்டிருந்தனர்.

**பகுதி (b)** இற்கும்கூட, ''அஞ்சல் விதி'' இன் அறிவுடன் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் **அப்சராவுக்கு** எதிராக **ஹகதுடுவ** சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அடையாளங் கண்டிருந்தனர்.

**பகுதி (c)** இல், ''சித்தாரா குருநான்சே'' **அப்சரா**வுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை ஆராயுமாறு கேட்கப்பட்டது. இந்த விவரணத்தில், ''சித்தாரா குருநான்சே'' மஞ்சள் ஆலேபா இனை குறித்துரைக்கப்பட்டிருந்த முறையில் பயன்படுத்தியிருந்தார். எனவே, அவர் **அப்சராவுக்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விடயத்தை பெரும்பாலானவர்கள் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**பகுதி (B)**

இந்த வினா பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டம் தொடர்பான உட்கிடை நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகள் இந்தப் பாடப் பரப்பில் பரீட்சார்த்திகளின் அறிவு போதுமானதாக இல்லை என்பதையே காட்டுகிறது. எவ்வாறாயினும், பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். ஆனால் அவர்களது செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை, திருப்திகரமான மட்டத்தில் இல்லை.**

- - -